# பாடம் 45 & 46: ஆண்டவரின் செபம்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 39 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 39 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 39 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடங்களில், அருளடையாங்கள் மற்றும் அருட்குறிகள் என்றால் என்னவென்று நாம் கற்றோம். அருளடையாள வாழ்வை வாழ்வதும் அன்றாட செப ஒழுங்கை உள்ளடக்கியுள்ளது. இந்த பாடத்தில் இருந்து, அடுத்த சில பாடங்களில் செபத்தைக் குறித்து விவாதிப்போம். இந்த பாடத்தில் மிகவும் முக்கியமானதும் சிறப்பானதுமான, இயேசுவாலே வழங்கப்பட்ட செபத்தை விவாதிப்பதில் இருந்து தொடங்குவோம்.

**தற்போதைய பாடம்:**

1. நமது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு நாம் பேசுவது போன்று, கடவுளோடு அல்லது புனிதர்களோடு நாம் பேசுகின்ற தொடர்பு வடிவமே செபம் ஆகும். அது "சொற்கள் அல்லது சைகைகள்" வழியாக வெளிப்படுத்தப்படலாம், "*இதயமே* செபிக்கிறது" (கதிம 2562). நாம் செபிக்கின்ற பொழுது, நமது இதயங்கள் உண்மையாகவும் கடவுள் மீது கவனம் கொண்டவையாகவும் இருக்க வேண்டும்; மற்றபடி, நமது சொற்களும் சைகைகளும் உண்மையில் செபங்களாக இருக்காது.

*புனித ஜான் தாமாசின்*: "செபம் என்பது ஒருவரின் மனதையும் இதயத்தையும் கடவுளிடம் எழுப்புவதாகும் அல்லது கடவுளிடம் இருந்து நல்ல விடயங்களைக் கோருவதாகும்."

2. கிறிஸ்துவில் கடவுளுடன் உடன்படிக்கை உறவுநிலை கொண்டிருக்கிறதால் மட்டுமே நாம் செபிக்க முடிகிறது (கதிம 2564). நாம் செபிக்கின்ற பொழுது, நாம் கடவுளுடன் அவரது பிள்ளைகளாக வாழும் உறவுநிலை கொண்டுள்ளோம் என்பது பொருளாகிறது (கதிம 2565).

3. புனித மறைநூலும் திருமரபும் கிறிஸ்தவ செபத்தில் ஐந்து வேறுபட்ட வடிவங்கள் இருக்கின்றன என்று வெளிப்படுத்துகின்றன:

அ) *போற்றுதல் மற்றும் ஆராதனை* (கதிம 2626-28). இந்த வடிவ செபத்தில், நாம் கடவுளின் மேன்மையை உயர்த்தி, எல்லாவற்றிலும் நாம் அவரைச் சார்ந்திருக்கிறோம் என ஒப்புக் கொள்கிறோம். திருப்பலியானது போற்றுதல் மற்றும் ஆராதனை வெளிப்பாடுகளால் நிறைந்துள்ளது. திருப்பலியில் பாடப்படும் *உன்னதங்களிலே* கீதம் இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு.

ஆ) *விண்ணப்பம்* (கதிம 2629-33). இந்த வடிவ செபத்தில், கடவுளிடம் நமக்குத் தேவையான விடயங்களை கேட்கிறோம், இவை ஆன்மிக அல்லது பொருள்சார் தேவைகளாக இருக்கலாம். நமக்கு வேண்டியதை வழங்குமாறு கடவுளிடம் கேட்பதில், நமக்கான அவரது விருப்பத்திற்கு நாம் எப்பொழுதும் பணிந்திருக்க வேண்டும்.

இ) *பரிந்துரை* (கதிம 2634-36). இந்த வடிவ செபத்திலும், நாம் தேவைகளை நிறைவேற்ற கடவுளிடம் கேட்கிறோம், ஆனால் நமக்குரியவற்றுக்குப் பதிலாக பிறரது தேவைகளுக்காக. மறைநூலில், இயேசு தொடர்ந்து இந்த வடிவில் செபித்தார், மற்றவர்களின் தேவைகளை வழங்குமாறு தந்தையிடம் கேட்டார்.

ஈ) *நன்றிகூறல்* (கதிம 2637-38). இந்த வடிவ செபத்தில், கடவுள் நமக்குச் செய்த எல்லாவற்றுக்காகவும் நாம் நன்றியறிதலோடு நமது இதயங்களை எழுப்புகிறோம். ஒருவேளை இன்று மிகவும் புறக்கணிக்கப்படும் செப வடிவங்களில் ஒன்றாக இது இருக்கிறது. கடவுள் நமக்குச் செய்த எல்லாவற்றுக்காகவும், அவர் நமக்குத் தந்த எல்லாவற்றுக்காகவும் நாம் நன்றி செலுத்தும் பொழுது, நமது இதயங்கள் நிறைவும் மகிழ்ச்சியும் அடைகின்றன.

உ) *புகழ்ச்சி* (கதிம 2639-43). இந்த வடிவ செபத்தில், கடவுள் என்னவாக இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்வதே புகழ்ச்சியாகும். அவர் நமக்கு நன்மைகள் செய்தார் என்பதற்காக அன்றி, அவர் கடவுளாக இருக்கிறார் என்ற காரணத்தால் நாம் அவரை மாட்சிப்படுத்துகிறோம். "கடவுளை அவருக்காக, அவரது மாட்சிக்காக, அவர் என்ன செய்கிறார் என்பதைத் தாண்டி, 'அவர் இருக்கிறார்' என்ற காரணத்தில்" புகழ்ச்சியின் கவனம் இருக்கிறது.

4. ஆண்டவரின் செபம் (கதிம 2759) என்பது இயேசுவால் நமக்கு வழங்கப்பட்ட நேர்த்தியான செபமாக இருக்கிறது:

விண்ணுலகின் இருக்கின்ற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக.
உமது ஆட்சி வருக.
உமது திருவுளம் விண்ணுலகைப் போல, மண்ணுலகிலும் நிறைவேறுக.
எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்,
எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல
எங்கள் குற்றங்களையும் மன்னியும்,
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்,
தீமையில் இருந்து எங்களை விடுவித்தருளும்.

5. இயேசு இந்த செபத்தைக் கற்பித்தது குறித்த இரண்டு பதிவுகளை நற்செய்திகள் கொண்டுள்ளன. முதல் பதிவு மத்தேயு 6:9-13ல் காணப்படுகிறது, அங்கு இயேசு மலைமீது தமது போதனையை வழங்குகிறார். அங்கு, அவர் மக்களுக்கு செபிக்கக் கற்பித்தார். இரண்டாம் பதிவு லூக்கா 11:1-4ல் காணப்படுகிறது, அங்கு "இயேசு ஒரு குறிப்பிட்ட இடத்தில் செபித்துக் கொண்டிருந்தார், அவர் முடித்த பொழுது, அவரது சீடர்களில் ஒருவர் அவரிடம், 'ஆண்டவரே, யோவான் அவரது சீடர்களுக்கு கற்பித்ததுபோல, எங்களுக்கு செபிக்கக் கற்றுத் தாரும்' என்றார். இந்த கோரிக்கைக்குப் பதிலிறுப்பாக இந்த அடிப்படை கிறிஸ்தவ செபத்தை தமது சீடர்கள் மற்றும் தமது திருச்சபையிடம் ஆண்டவர் ஒப்படைத்தார்." (கதிம 2759)

6. ஆண்டவரின் செபமானது ஒவ்வொரு கிறிஸ்தவரும் அறிந்திருக்க வேண்டிய மிகவும் அடிப்படையான செபமாக இருக்கிறது. நாம் பல செபங்களைச் செபிக்கலாம், ஆனால் இந்த ஒரு செபம் மட்டுமே, வார்த்தைக்கு வார்த்தை ஆண்டவர் இயேசுவால் நமக்கு வழங்கப்பட்டது. இந்த செபத்தையே இறைமகன் தாமே தந்தையிடம் செபிக்குமாறு நமக்கு கற்பித்தார், இதன் காரணமாகவே மற்ற செபங்களின் நடுவே இந்த செபம் உண்மையில் தனித்துவமானதாக இருக்கிறது (கதிம 2765). இதனாலே, இது "ஆண்டவரின் செபம்" (ஓராத்சியோ தொமினிக்கா) என்று அழைக்கப்படுகிறது.

7. அதே நேரத்தில், இயேசுவும் முழுமையான மனிதராக இருக்கிறதால், அவர் தமது மனித இதயத்தில் தமது மனித சகோதர சகோதரிகளின் தேவைகளை அறிந்திருக்கிறார், மேலும் இந்த தேவைகளுக்காக தந்தையிடம் எப்படி கேட்பது என்பதை இந்த செபத்தின் வழியாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகவே, அவர் நமது செபத்திற்கு மாதிரியாக இருக்கிறார்.

8. ஒரு கிறிஸ்தவர் கடவுளிடம் சொல்ல வேண்டிய அனைத்தையும் ஆண்டவரின் செபம் கொண்டுள்ளது. இது நமது கிறிஸ்தவ விசுவாசத்தை நேர்த்தியாகப் பொழித்துரைக்கிறது.

*தெர்த்துல்லியன்* (2ஆம், 3ஆம் நூற்றாண்டுகள்), ஆண்டவரின் செபமானது "உண்மையில் நற்செய்தி முழுவதன் பொழிப்பாக இருக்கிறது" என்கிறார் (கதிம 2761).

ஹிப்போ புனித அகுஸ்தீன் (4ஆம் நூற்றாண்டு), "(மறைநூலில்) தூய செபங்களின் எல்லா சொற்களின் ஊடாகச் சென்றால், அவற்றில் உள்ள எதையும் ஆண்டவரின் செபம் கொண்டிராமலும் உள்ளடக்காமலும் இருக்கிறதை நீங்கள் கண்டறிவீர்கள் என்று நான் நினைக்கவில்லை" என்கிறார் (கதிம 2762).

*புனித தாமஸ் அக்குவினாஸ்* (13ஆம் நூற்றாண்டு), "செபங்களிலே மிகவும் நேர்த்தியானதாக ஆண்டவரின் செபம் இருக்கிறது. அதில் நாம் சரியாக விரும்ப முடிகின்ற விடயங்களுக்காக மட்டுமின்றி, அதன் விளைவாக நாம் விரும்ப வேண்டியவற்றையும் நாம் கேட்கிறோம். இந்த செபம் விடயங்களைக் கேட்பதை மட்டுமின்றி, எந்த வரிசையில் நாம் அவற்றை விரும்ப வேண்டும் என்பதையும் நமக்கு கற்பிக்கிறது" என்று கற்பிக்கிறார் (கதிம 2763).

9. ஆண்டவரின் செபமானது தந்தையாகிய கடவுளிடம் கேட்கின்ற ஏழு விண்ணப்பங்களைக் கொண்டுள்ளது.

முதல் மூன்றும், கடவுள் மீது மையங்கொண்டு, நம்மை அவரையும் அவரது மாட்சியையும் நோக்கி இழுக்கின்றவையாக இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக நாம் முதலில் அவரை நினைக்கிறோம், ஏனெனில் கடவுளையே நாம் முதலில் அன்பு செய்கிறோம். நாம் அவரைப் பற்றிக் கேட்க வேண்டியவற்றை இந்த விண்ணப்பங்கள் கொண்டுள்ளன: அவரது பெயருக்கான மரியாதை, அவரது அரசின் வருகை, மற்றும் அவரது திருவுளம் நிறைவேறுதல்.

இறுதி நான்கு விண்ணப்பங்கள் நமது வலுவின்மை மற்றும் நமது தேவைகளைத் தந்தையிடம் வழங்குகின்றன. அவை நமக்கு உணவளிக்க, நம்மை மன்னிக்க, நாம் சோதனைகளில் நிலைத்திருக்க, மேலும் தீயோனிடம் இருந்து நம்மை விடுவிக்க அவரைக் கேட்கின்றன.

10. **முதல் விண்ணப்பம்: விண்ணுலகின் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக.** இவ்வுலகச் சிலைகளிடம் இருந்து உரிமையுள்ள ஆட்சியாளரிடம் நமது இதயங்களைத் திருப்புவதில் இந்த செபம் தொடங்குகிறது. நமது திருமுழுக்கிலும் இந்த செபத்திலும், அலகையின் செயலையும் அவன் படைப்பு அனைத்துக்கும் விளைவிக்கும் தீங்கையும் நாம் கைவிடுகிறோம், மேலும் கடவுள் நம்மீது கொண்டுள்ள ஆட்சித்துவத்திற்கு நம்மையே நாம் தன்னார்வத்தோடு பணியச் செய்கிறோம்.

11. நாம் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், படைப்பின் உரிமையுள்ள அரசரான இயேசு கிறிஸ்துவின் திரும்புதலுக்காக நாம் காத்திருக்கின்றோம். இதன் காரணமாக, ‘‘வேற்று நிலத்தில் வேற்றவர்களும் வெளியாட்களுமாய்’’ (1பேது 2:11) நாம் இருக்கிறதை நினைவூட்டவே, கிறிஸ்து அரசர் விழாவை நாம் ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டின் முடிவிலும் கொண்டாடுகின்றோம். கடவுளின் மதிப்பீடுகளுக்கு (விழுமியங்களுக்கு) முரணான இவ்வுலகின் மதிப்பீடுகளால் இனிமேல் நாம் அச்சுறுத்தப்படாத நாளுக்காக நாம் ஏங்குகின்றோம்.

12. தமது மக்கள் மீது அக்கறை கொண்ட, நம்மைத் தமது பிள்ளைகள் ஆக்கியுள்ள, கனிவானவரும், நல்லவரும், அன்புள்ளவருமான ஆட்சியாளரை உடைய ஓர் அரசை நாம் சார்ந்துள்ளோம் என்பதை இந்த செபத்தில் நாம் நினைவூட்டப்படுகிறோம். நாம் அவரைச் சார்ந்தவர்கள் என்பதை நாம் மறந்துவிடும் எல்லா நேரங்களிலும், அவரிடம் திரும்பி, அவரை நமது வாழ்வின் ஆண்டவராகக் கொள்ள இந்த செபத்தில் நாம் நினைவூட்டப்படுகிறோம். நாம் அவரிடம் திரும்பி வந்து ‘‘எங்களை தந்தையே’’ என்று அவரை அழைக்கிறோம்.

13. அவரை ‘‘தந்தை’’ என்று அழைக்கிறதில், அவர் ஆட்சி செய்கிறவராகவும் எல்லாம் வல்லவராகவும் இருக்கிறதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். சில நேரங்களில், கடவுளின் கட்டுப்பாட்டில் எதுவும் இல்லை என்பது போன்ற உலக நிகழ்வுகள் நடைபெறலாம். ஆனால் கடவுள் ஆட்சி செய்கிறதினால், (தமது விருப்பத்துக்கு வெளியே) பல விடயங்கள் நிகழ அவரால் அனுமதிக்க இயலும் என்பதை இந்த செபம் நமக்கு நினைவூட்டுகிறது, இன்னும் அவரது விருப்பமே முடிவாக இருக்கும் என்பதையும் உறுதி செய்கிறது. தீயோனின் வேலையைக் கூடத் தமது விருப்பதை நிறைவேற்ற கடவுளால் பயன்படுத்த முடியும். அது எப்படி வேலை செய்கிறது என்பதை நம்மால் மெய்யாகப் புரிந்துகொள்ள முடியாது, ஏனெனில் கடவுளின் வழிகள் நமது சொந்த வழிகளை விட உயர்ந்தவை (காண். எசா 55:8-9). உலகம் கட்டுப்பாடின்றி இருக்கிறதாகத் தெரிந்தாலும், அனைத்தையும் நேர்த்தியாகக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள நம் தந்தையை நாம் கொண்டுள்ளதை நாம் நம்பலாம். ‘‘அவரை அன்பு செய்கிறவர்கள், அவரது நோக்கத்திற்கு ஏற்ப அழைக்கப்பட்டவர்கள், அவர்கள் நன்மைக்காக அனைத்தையும் திருப்பவே’’ (உரோ 8:28) அவர் இதைச் செய்கிறார்.

*கதிம 760*: ‘‘எல்லா விடயங்களின் இலக்காகத் திருச்சபை இருக்கிறது, மேலும் வானதூதர்களின் வீழ்ச்சி மற்றும் மனிதரின் பாவம் போன்ற வலிநிறை உயர்வெழுச்சிகளை, தமது புயத்தின் எல்லா ஆற்றலையும், உலகிற்கு அவர் வழங்க விரும்பிய முழு அளவிலான அன்பையும் வெளிக்காட்டுகின்றத் தருணங்களாக மட்டுமே கடவுள் அனுமதித்துள்ளார்.’’

14. **இரண்டாம் விண்ணப்பம்: உமது ஆட்சி வருக.** படைப்பின் ஆதாரமாக கடவுள் இருக்கின்றார், அவர் முதலில் நமது முதல் பெற்றோரைப் படைத்த பொழுது அவர் அதை மனிதகுலத்தின் ஆளுகையின் கீழ் வைத்தார். ஆதாமும் ஏவாளும் கடவுளின் ஆட்சித்துவம் மற்றும் அதிகாரநிலைக்கு எதிராக முழுவிருப்பத்துடன் கிளர்ச்சி செய்யுமாறு ஏமாற்றப்பட்ட பொழுது இந்த ஆளுகை சாத்தானிடம் கையளிக்கப்பட்டது. இதன் காரணமாக, இயேசு – குறைந்தது மூன்று முறை – சாத்தானை இவ்வுலகின் அரசன் என்று அடையாளப்படுத்துவதை

யோவான் நற்செய்தி (12:31-32, 14:30-31, 16:7-11) பதிவு செய்கிறது. மனிதகுலத்தின் வீழ்ச்சியில், படைப்பு தற்போது அலகையின் சட்டப்பூர்வ ஆளுகையின் கீழ் வந்துள்ளது. உண்மையில், கடவுள் தமது கட்டுப்பாட்டை இழந்துவிட்டார் என்பது இதன் பொருளன்று, ஏனெனில் அலகையால் அறிய முடியாதத் திட்டங்களை அவர் கொண்டுள்ளார் (ஏனெனில், பகைவன் அறியுமாறு கடவுள் அனுமதிக்கிறவற்றை மட்டுமே அவன் அறிய முடியும்).

15. கடவுளின் திட்டத்தில், சாத்தானின் ஆளுகைக்கு உட்பட்ட அரசை மீட்டமைத்தல் அவரது மகன் இயேசு கிறிஸ்துவின் எய்துபணியாக மாறியது. மற்ற வார்த்தைகளில், கடவுளின் அரசு அல்லது விண்ணக அரசை அறிவிக்க இயேசு வந்தார். ‘‘கடவுளின் அரசு’’ (இறையரசு) குறித்த சுட்டல்கள் புதிய ஏற்பாட்டில் 72 முறையும், ‘‘விண்ணக அரசு’’ (விண்ணரசு) பற்றி 32 முறையும் (எல்லாமே மத்தேயு நற்செய்தியில்) காணப்படுகின்றன. இரண்டு பதங்களுமே புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் மாற்றிமாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தெளிவாக, கடவுளின் அல்லது விண்ணக அரசின் இருப்பும் வருகையும் இயேசுவின் செய்தியின் மையமாக இருந்தது. அவரது எல்லா படிப்பினைகளும் மக்கள் எப்படி கடவுளின் அரசில் நுழையலாம் என்பதைக் காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டவை. அவரது வல்ல செயல்கள், அவரைப் பின்தொடர்ந்தோர் மீது விண்ணகம் வந்துள்ளது என்பதை எண்பிக்கும் நோக்கம் கொண்டிருந்தன. அவரது எல்லா உவமைகளும் இதைக் குறித்த உண்மைகளைச் சித்தரித்தன.

மலைப்பொழிவின் வேளையில் இயேசு தமது சீடர்களுக்குச் செபிக்கக் கற்பித்த பொழுது (மத் 5-7), ‘‘உமது அரசு வருக, உமது திருவுளம் விண்ணுலகைப் போல, மண்ணுலகிலும் நிறைவேறுக’’ (மத் 6:10) என்கின்றச் சொற்களே அவர்களது விண்ணப்பங்களின் இதயமாக இருந்தன. இந்த நவீன உலகில், ‘‘அரசு’’ என்ற வார்த்தையின் பயன்பாடு வினோதமாகத் தோன்றலாம், நவீன ஆட்சிமுறையில் முடியாட்சியின் சில அம்சங்களே உள்ளன. அலகையின் ஆளுகையை முறியடித்து, வந்துள்ள கடவுளின் அரசு பற்றி இயேசு மக்களுக்கு கற்பித்தார்.

16. இயேசுவின் பாடுகள், இறப்பு, மற்றும் உயிர்ப்பில், படைப்பு மற்றும் ஒவ்வொரு மனித இதயத்தின் மீதான தமது அதிகாரநிலை மற்றும் ஆளுகை, தமது *அரசை* மீட்டமைப்பதற்கான ஆன்மிக விலையீட்டை அவர் ஏற்கெனவே செலுத்தி விட்டார். அவரது வலிநிறை பலியானது, படைப்பின் மீதான கடவுளின் உரிமையுள்ள ஆளுகையை மீட்டமைப்பதற்கான விலையாக இருக்கப் போகிறது (மத் 26:17-30). இதன் காரணமாகவே, ‘‘கடவுளின் அரசு வந்துவிட்டது’’ (மத் 3:2; 4:17; மாற் 1:15) என்பது அவரது பொது திருப்பணி முழுவதும் அவரது செய்தியின் முக்கிய வலியுறுத்தலாக இருந்தது, மண்ணகத்தில் அவரது பணி நிறைவுற்றத் தருணத்தில், அவரது கடவுளுக்குரிய அரசின் இந்த ஆளுகை நடைமுறைக்கு வந்தது (யோவா 19:30).

17. ‘‘உமது அரசு வருக’’ என செபிப்பதில், படைப்பு மற்றும் மனிதகுலத்தின் மீதான சட்டப் பூர்வ ஆட்சியாளரை நாம் கண்டுணர்ந்து வெளிக்காட்டுகிறோம். இயேசு கிறிஸ்துவில் மட்டுமே மனிதகுலம் நமது இருத்தலின் உண்மை பொருளையும் நோக்கத்தையும் கண்டறிய முடியும் என்பதை நாம் கண்டுணர்கிறோம். கடவுளின் ஆளுகையில் மட்டுமே, மனிதகுலத்தை முழு அமைதி (எபிரேயத்தில், *ஷலோம்*) நிலைக்குக் கொணர்வதற்கான, நீதி மற்றும் அமைதியை மீண்டும் முழுமையாக மீட்டமைக்க முடியும் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம்.

18. **மூன்றாம் விண்ணப்பம்: உமது திருவுளம் விண்ணுலகைப் போல, மண்ணுலகிலும் நிறைவேறுக.** கடவுளின் ஆட்சித்துவத்திற்கும், அவரது அசரின் நோக்கத்திற்கும் முழுவதும் தங்களை அர்ப்பணித்துள்ள மக்கள் என்ற முறையில், அவரது படைப்பின் வடிவமைப்புக்கு ஏற்ப மண்ணகத்தில் அவரது திருவுளம் நிறைவேற வேண்டும் என்பதே நமது முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும். கடவுளின் திட்டங்களைத் தாக்க எதிர்க்கும் சக்திகள் எப்பொழுதும் முயற்சித்தாலும், படைப்பின் மீதான உரிமையுள்ள அரசராக இயேசு கிறிஸ்து திரும்ப வரும்போது அவை நிறுத்தப்படும்.

*கதிம 672*: ‘‘கிறிஸ்துவின் ஆட்சி ஏற்கெனவே அவரது திருச்சபையில் இருந்தாலும், அரசரின் மண்ணகத் திரும்புதலின் வழியாக ‘வல்லமை மற்றும் பெரும் மாட்சியோடு’ நிறைவுபெற வேண்டியுள்ளது. கிறிஸ்துவின் பாஸ்காவால் உறுதியாக வெல்லப் பெற்றிருந்தாலும், தீய சக்திகளால் இந்த ஆட்சி இன்னும் தாக்கப்பட்டு வருகிறது. அனைத்தும் அவருக்குப் பணியும் வரை, ‘நீதி குடிகொண்டுள்ளப் புதிய விண்ணகமும் புதிய மண்ணகமும் கண்டுணரப்படும்

வரை, திருப்பயணியானத் திருச்சபை, தற்போதையக் காலத்தைச் சார்ந்த, கடந்துபோகும் இந்த உலகின் குறியைச் சுமக்கின்ற, தனது அருளடையாளங்கள் மற்றும் நிறுவல்களில், அவள் தானே இன்னும் ஏக்கத்தோடும் வேதனையோடும் உள்ள படைப்புயிரிகளின் நடுவே தனது இடத்தை எடுத்துக்கொண்டு, இறைமகனின் வெளிப்பாட்டுக்காகக் காத்திருக்கிறாள்.' இதன் காரணமாகவே கிறிஸ்தவர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக நற்கருணையில், கிறிஸ்துவின் திரும்புதலை விரைவுபடுத்த அவரிடம் கூறுகின்றனர்: மாரநாதா! 'எங்கள் ஆண்டவரே, வாரும்!'''

19. அரசரான கிறிஸ்துவின் திரும்புதலுக்காகத் தொடர்ந்து காத்திருந்து, நாம் செபிக்கையில், நமது செபத்தின் ஒரு பகுதியாக மண்ணகத்தில் அவரது ஆட்சியைக் கட்டியெழுப்ப நமது செயல் முன்னியங்கி ஒத்துழைக்க வேண்டும். உதடுகளால் மட்டும் கடவுளைப் போற்றுவதில் எந்தப் பயனும் இல்லை. நமது திருமுழுக்கில், கிறிஸ்துவின் திரும்புதலுக்காக, இந்த உலகை மிகத் தூய இடமாக மாற்ற முயற்சித்து, இந்த உலகைத் தயாரிப்பதில் கடவுளோடு ஒத்துழைப்பது நமது பொறுப்பாக மாறியுள்ளது. மக்கள் நம்மைச் சந்திக்கும் பொழுது, அவர்கள் கடவுளின் அரசைச் சந்திக்க வேண்டும்; இந்த மாட்சிமிகு, ஆதரவளிக்கும் அரசரின் அன்பை அனுபவிக்க வேண்டும்; அவரது அரசால் ஈர்க்கப்படுவதை அவர்களே கண்டறிய வேண்டும்.

20. **நான்காம் விண்ணப்பம்: எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்.** முதல் மூன்று விண்ணப்பங்களுக்குப் பிறகு, இந்த நான்காம் விண்ணப்பம் நமது தேவைகளுக்குத் திரும்ப நம்மை அனுமதிக்கிறது. மனிதர்கள் என்ற முறையில் நம் அடிப்படைத் தேவைகளை நமது படைப்பாளரான கடவுள் அறிந்திருக்கிறார். உயிர் வாழ்வதற்கு உணவும், உடலை மறைக்க உடையும், இயற்கை ஆபத்துகளில் இருந்து நம்மைப் பாதுகாக்க உறைவிடமும் நமக்குத் தேவை. ஆனால் மனிதகுலத்தின் வீழ்ச்சியினால், இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நமது வேலை, பெரும்பாலும் பொருட்களைச் சேர்க்கின்றப் பேராசையின் பந்தயமாக மாறிவிடுகிறது. பொருள்வாதம் இன்றையப் பண்பாடாக மாறியுள்ளது.

21. நாம் வைத்துள்ள அனைத்தும் கடவுளிடம் இருந்து வருகின்றதை நாம் கண்டுணர்கிறோம். இந்த விண்ணப்பத்தில், நமது அன்றாட ஊட்டத்துக்காக நாம் அவரையே சார்ந்துள்ளோம் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். அதே நேரம், நம்மைச் சுற்றிப் பொருள்சார் தேவைகளில் இருக்கின்ற மற்றவர்கள் குறித்த விழிப்புணர்வோடு கடவுள் நமக்கு உதவுமாறு கேட்கிறோம், அதனால் நம் வழியாக அவர்களின் பொருள்சார் தேவைகளை கடவுள் சந்திக்கலாம்.

22. ''மனிதர் அப்பத்தினால் மட்டுமன்றி, கடவுளின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லாலும் உயிர் வாழ்வர்'' (மத் 4:4) என்பதனால், நாம் இறைவார்த்தைக்காகவும் நற்கருணையில் பெறுகின்ற கிறிஸ்துவின் உடலுக்காகவும் பசியோடு இருக்க வேண்டும் என்பதும் இந்த விண்ணப்பத்தின் பொருளாகும். நமக்கான உடல்சார் ஊட்டத்தை கடவுள் வழங்குகிற அதே விதத்தில், நமக்கான ஆன்மிக ஊட்டத்தையும் அவர் வழங்குவார் என நாம் நம்புகிறோம்.

23. அண்மைய கோவிட்-19 பெருந்தொற்றின் வேளையில், உலகெங்கும் பல மக்கள் மிக ஏழைகளாயினர். உண்மையில், அதிக மக்கள் பங்குபெறும் திருப்பலிகள் கொண்டாடப்பட முடியாததால், உலகெங்கும் பல கத்தோலிக்கர் தூய நற்கருணையில் கிறிஸ்துவைப் பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டனர். அத்தகைய மறுக்கப்படும் நேரங்களில், நமது உடல்சார் மற்றும் ஆன்மிகத் தேவைகளையும், மற்றவர்களின் தேவைகளையும் வழங்குமாறு கடவுளிடம் செபிக்க வேண்டும். அவரிடம் செபிக்கும்போது, அவரில் நம்பிக்கையும் வைக்க வேண்டும்.

24. நமக்குத் தேவையான அனைத்தையும் வழங்குமாறு கடவுளிடம் நம்பிக்கை கொள்தல் என்பதற்கு, நாம் உழைக்கத் தேவையில்லை என்பது பொருளன்று. லொயோலா புனித இக்னேசியுஸ் (16ஆம் நூற்றாண்டு) நமக்கு ஆலோசனை வழங்குகிறார்: ''அனைத்தும் கடவுளைச் சார்ந்துள்ளது போல் செபியுங்கள், அனைத்தும் உங்களைச் சார்ந்துள்ளது போல் உழையுங்கள்''.

25. **ஐந்தாம் விண்ணப்பம்: எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களையும் மன்னியும்.** நாம் திருமுழுக்கு அருளடையாளம் பெற்று, தொடக்கப் பாவத்தில் இருந்து தூய்மையாக்கப் பெற்றிருந்தாலும், இன்னும் நமது வாழ்வில் தவறு செய்வதில் சாய்ந்திருக்கிறோம் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். இதன் காரணமாக,

நமக்கு கடவுளின் இரக்கம் தேவையாகிறது. ஆகவே, நமது தவறுகளுக்காக நம்மை மன்னிக்குமாறு அவரிடம் நாம் கேட்கிறோம்.

26. நமது குற்றங்கள் என்பதை நாம் தவறாகச் செய்த விடயங்களை மட்டுமே குறித்துக்காட்ட அவசியமில்லை. அது நமது நன்மைக்காகவும் மற்ற மக்களின் நன்மைக்காகவும், நாம் செய்யத் தவறிய நல்ல விடயங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

27. கடவுளின் இரக்கத்தைக் கேட்டல் என்பது தாழ்ச்சியின் ஒரு செயலாகும். கடவுளின் உதவியின்றி நாம் தூயோராக முடியாது என்பதை நாம் கண்டுணர்கிறோம். நம்மிடம் தாழ்ச்சி இல்லாமல், கடவுளால் நம்மை மன்னிக்க முடியாது, ஏனெனில் தாழ்ச்சி இல்லாமல் உண்மை மனந்திருந்தல் (மனதின் மாற்றம் மற்றும் வாழ்வு மாற்றம்) இருக்க முடியாது.

28. கடவுளின் மன்னிப்பு நம்மை நோக்கி ஒரு நிபந்தனையுடன் வருகிறது: நமக்குத் தீங்கு செய்த மற்றவர்களை நாமும் மன்னிக்க வேண்டும். அதனால் உறவுநிலைகள் நலமாக்கப் பெற்று, தமது அரசில் மனிதகுலம் எல்லாம் நேர்த்தியான அன்பை அனுபவிப்பதே கடவுளின் மன்னிப்பின் நோக்கமாகும். நமது குற்றங்களுக்காக கடவுள் நம்மை மன்னிக்கிறார் எனில், நமக்கு எதிராகக் குற்றம் செய்த மற்றவர்களை நாம் மன்னிக்க மறுத்தால், இன்னும் உறவுநிலைகள் மீட்டுருவாக்கம் பெறுவதில்லை.

29. நமக்குத் தீங்கு செய்த மற்ற மக்களை மன்னித்தலை விட, கடவுளிடம் இருந்து மன்னிப்பு பெறுதல் எளிதானது. மன்னிப்பு என்பது ஓர் உணர்ச்சி அன்று. மற்றவர்களை மன்னித்தல் என்பது, அவர்களது குற்றங்கள் இன்னும் நம்மை உணர்ச்சிப்பூர்வமாகப் புண்படுத்தினாலும், அவர்கள் நம்மைப் புண்படுத்தியதற்காக அவர்கள் இனிமேல் தண்டிக்கப்படக் கூடாது என விரும்புவதாகும். மிகப் பெரும்பாலும், மற்றவர்களை மன்னிக்க நேரம் எடுக்கும், ‘‘போகட்டும்’’ என்று முடிவெடுப்பது பலமுறை தள்ளிப்போகும். ஆனால் இந்த விதத்தில், கடவுள் நம்மை எவ்வளவு அதிகமாக அன்பு செய்கிறார், நமது குற்றங்களை மன்னிக்கத் தயாராக இருக்கிறார் என்பதையும் நாம் கண்டுணர்கிறோம். நன்றியுணர்வோடு, நாமும் மற்ற மக்களுக்கு அதே போன்று செய்ய வேண்டும்; ஏனெனில் கடவுளை அன்பு செய்வதும், அடுத்துள்ளவரை அன்பு செய்வதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

30. கடவுளின் அரசு என்பது நேர்த்தியான அன்பு மற்றும் ஒன்றிப்பின் உறவுநிலைகளைக் கொண்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். காயப்பட்ட அல்லது உடைந்த நமது உறவுநிலைகளை நாம் சரி செய்யவில்லை எனில், அந்த அரசின் ஒரு பகுதியாக நாம் இருக்க முடியாது.

31. **ஆறாம் விண்ணப்பம்: எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.** நாம் பாவம் செய்யுமாறு சோதிக்கின்றவர் கடவுள் என்பது இந்த விண்ணப்பத்தின் பொருளன்று. நமது பாவ ஆசைகளினாலும் அலகையின் சோதனைகளாலும் நாம் சோதிக்கப்படுவதாக உணர்கின்றோம் என்பதே இதன் பொருள். இத்தகைய சோதனைகளில் இருந்து நம்மைப் பாதுகாக்குமாறு கடவுளிடம் நாம் கேட்கின்றோம்.

32. சோதிக்கப்படுதல் என்பது தன்னிலேயே தவறானது அன்று. சோதிக்கப்படுதல் என்பதற்கு பாவம் செய்வதற்கு ஆசைப்படுதல் என்பது பொருள், அந்த ஆசை நமக்கு உள்ளிருந்தோ அல்லது சாத்தானிடம் இருந்தோ வருகிறது. இயேசு தாமே அனைத்து விதத்திலும் சோதிக்கப்பட்டார், ஆனால் பாவத்தில் விழவில்லை (எபி 4:15). அவரால் மனிதகுலத்தின் வலுவின்மையைப் புரிந்துகொள்ள இயலும். சோதனையை வெற்றிகொள்ள அவர் நமக்கு உதவுகிறார்.

33. சோதனைகள் எப்பொழுதும் நம்மிடம் இருந்து அகற்றப்பட ஒரு வழியும் இல்லை, ஏனெனில் சோதனைகள் என்பவை உண்மையில் நல்லவை, நாம் எப்படி வலுவாக இருந்து அவற்றை வெற்றிகொள்வது என்பதைக் கற்பதற்கான ஒரு வாய்ப்பை நமக்கு வழங்குகின்றன. நமது வாழ்வில் சோதனை இல்லையெனில், நாம் எவ்வளவு வலுவானவர்களாக அல்லது வலுவற்றவர்களாக இருக்கிறோம் என்பது நமக்குத் தெரியாது.

34. இயேசு செபத்தின் வழியாகச் சோதனையை வென்றார், நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். சோதனையை வெல்லும் வலிமையை கடவுள் நமக்கு வழங்க வேண்டுமென நாம் எப்பொழுதும் செபிக்க வேண்டுமென இந்த விண்ணப்பம் நமக்கு நினைவூட்டுகிறது.

35. **ஏழாம் விண்ணப்பம்: தீமையில் இருந்து எங்களை விடுவித்தருளும்.** நமது வாழ்வில் தீமையின் செல்வாக்கை வெளியேற்றுமாறு கடவுளிடம் நாம் கேட்கிறோம்.

36. தீமை என்பது வெறுமனே ஒரு ‘‘சக்தி’’ அன்று. தீமை என்பது ஒரு ‘‘நபர்’’. அது சாத்தான் மற்றும் எல்லா வீழ்ச்சியுற்ற வானதூதர்களின் (அலகைகள் அல்லது பேய்கள்) வடிவில் இருக்கிறது. கடவுளின் திட்டத்திற்கு எதிராகப் போரிட அவை எப்பொழுதும் மனிதரைச் சோதிக்க முயல்கின்றன.

37. சாத்தான் நிலையாக நமக்கு கண்ணி வைத்துள்ளது, அதனால் நாம் அறிந்தோ அல்லது அறியாமலோ நமது பழைய வாழ்வுக்குத் திரும்புகிறோம். நமது வாழ்வில் அலகையின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வோடு இருக்க உதவுமாறு கடவுளிடம் நாம் கேட்கிறோம், அதனால் அவனை எதிர்க்கும் ஆற்றலை நாம் பெறுகிறோம்.

38. இயேசு ஒருநாள் திரும்பி வரும்போது, அவர் சாத்தான் மற்றும் அவனது எல்லா தீய ஒத்துழைப்பாளர்களின் வல்லமையை அழித்தொழிப்பார். அவரது மாட்சிமிகு திரும்புதலுக்காக நாம் காத்திருக்கும் வேளையில், இந்த வீழ்ச்சியுற்ற வானதூதர்களால் கொணரப்படும் சோதனைகளுக்கு எதிராக நாம் போரிட வேண்டும். எனினும், நமது போரில் நாம் தனியாக இல்லை, கடவுள் நம்மோடு இருந்து இந்தப் போரில் வெற்றிபெற நமக்கு வலுவூட்டுவார்.

39. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து திரும்பி வரும்போது, தீய சக்திகளின் வேலையில் இருந்து நமக்கு இறுதி விடுதலை கிடைக்கும். ஆகவே, நம்மைத் தீமையில் இருந்து விடுவிக்குமாறு அவரிடம் கேட்பதில், சாத்தியமான வகையில் விரைந்து திரும்பி வருமாறும் அவரிடம் கேட்கிறோம், அதனால் தீமையின் வல்லமை என்றென்றுமாக அழித்தொழிக்கப்படும்.